# வரலாறு

# தரம் 10

# பாடத்திட்டம்

(2007 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
2006

# அறிமுகம்

மனித நாகரிகங்ளின் வளர்ச்சிப் போக்கில் எற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார, சமய மற்றும் பண்பாட்டுத் துறைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றின் வெற்றிகளின் பல்வகைத்தன்மைகளை ஒப்பீட்டு ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் விளங்கிக் கொள்வதனூடாக வரலாற்றைக் கற்கக் கூடியதாயிருக்கும். இத்தகைய கற்றலானது சூழல் மற்றும் தேசிய உரிமைகளைப் பாதுகாப்பதுடன் அனைத்து இனங்களும் ஒன்றாக வாழ்வதற்கான சிறந்த சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் முதன்மைப்படுத்தப்பட்டதாக இருத்தலவசியம்.

2007 இலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீரத்திருத்தங்களின் மூலம் தரம் 6 இல் இருந்து தரம் 11 வரை வரலாற்றுப் பாடமானது பாடசாலை கலைத்திட்டத்தில் கட்டாயப் பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்த்திருத்தங்களின் கீழ் அறிமுகம் செய்யப்படும் பாடங்கள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. தரம் 6 இல் இருந்து தரம் 11 வரை வரலாறு பாடத்திட்ட தயாரிப்பில் அடையாளம் காணப்பட்ட பாடத்திட்ட தேர்ச்சிகள் அடிப்படையாகக் கொண்டு இப்பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டமானது 2007 இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பதினொரு தலைப்புகளையும் செயற்றிட்டங்களையும் கொண்டுள்ள இப்பாடத்திட்டத்தில் இலங்கை, இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய உலக வரலாற்று நிகழ்ச்சிகளும் தலைப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## 2.0 வரலாற்றுப் பாடப் பொதுத் தேர்ச்சிகள்

- வரலாற்றுப் பரவல், போக்குகள் தொடர்பாக அறிந்து கொள்வார்
- நிகழ்காலத்தை அறிந்து கொள்வதற்காக கடந்த காலம் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளும் முறையை ஆராய்வார்
- தேசிய பிரச்சினைகளின் பால் தெளிவான நோக்கை வளர்த்துக் கொள்வார்
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நபர்களின் குணவியல்புகளை முன்மாதிரியாகக் கொண்டு தேசிய பெறுமானங்களை விருத்தி செய்வார்
- வரலாற்றினூடாகத் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளத் தூண்டப்படுவார்
- வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கால சம்பவங்களை பயனுள்ளதாக்கிக் கொள்வார்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 3.0 தரம் 10 இற்கான தேர்ச்சிகள்

- வரலாறு கற்பதற்கான மூலாதாரங்களை ஆராய்வார்
- இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சியைக் கற்பார்
- பொலன்னறுவை யுகத்தின் இறுதி வரை இலங்கையின் வரலாற்றைக் கற்பார்
- நீர்வள நாகரீகம் என்றால் என்ன என்பதை விளக்குவார்
- மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளை கற்பார்
- ஐரோப்பியரின் அதிகார விரிவாக்கம் இடம்பெற்ற விதத்தைக் கற்பார்
- இலங்கைக்கும் மேற்கத்தேயருக்கும் இடையில் நிலவிய தொடர்புகளைக் கற்பார்
- ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளை கற்பார்

மேற்கூறப்பட்ட தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைந்து கொள்வார்

- இலங்கையின் வரலாற்றுப் பெறுமானங்கள் மற்றும் விழுமியங்கள் பற்றி பெறுமித உணர்வுடன் செயற்படுவார்
- வரலாற்று ரீதியான பெறுமானமுடைய தலங்கள், சின்னங்கள், அமைவிடங்களை இனங்காணல்

## 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

வரலாறு பாடத்திட்டத்தின் உள்ளடக்க கருத்துக்களை வெற்றிகரமாகவும் செயற்றிறன் வாய்ந்த வகையிலும் கற்பதற்கும் அதனூடாக கற்றல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் ஏற்புடைய வகையில் மாணவர்களின் பங்கு பற்றலை விருத்தி செய்யும் விதமாகப் பாடசாலை வேலைத்திட்டம் வழங்கப்படுதல் மிகவும் அவசியமாகும். இவ்வேலைத்திட்டம் மாணவர்களின் வாழ்க்கைக்கும் அவர்களது சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும்.

இங்கு அவ்வாறான சில ஆலோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. இதற்கேற்ப வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் தயாரிப்பதற்கான சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- வரலாற்று மன்றத்தை நிறுவி மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கான கலந்துரையாடல்கள், மாநாடுகள், விவாதங்கள், கண்காட்சிகள், சஞ்சிகைகள், சுவர் பத்திரிகை போன்றவற்றைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்தப்படல் வேண்டும்.
- மேலும் காலத்திற்குக் காலம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கான கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்ள வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்கும் ஏதுவான முன்னேற்பாட்டுடன் கூடிய கல்விச் சுற்றுலாவை ஒழுங்குபடுத்தல் முக்கியமானது.
- இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்றாய்வாளர்களை வரவழைத்து அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்
- தொல்பொருள் அழிவுக்குள்ளாகி வரும் இன்றைய காலகட்டத்தில் பிரதேசம் முழுவதும் தொல்பொருள் முக்கியத்துவமுள்ள பொருட்கள் தொடர்பாகத் தேடியாராயவும் அவற்றைப் பாதுகாப்பதற்கான பாடசாலை மற்றும் மக்களது பங்குபற்றலுடனான மக்கள் நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தல்
- வரலாற்று பாடத்திற்குரிய சித்திரங்கள், சிலைகள், ஏனைய பொருட்களை அவதானிப்பதற்கும் அவதானிப்பு அறிக்கை தயாரிக்கக் கூடியவாறும் அருங்காட்சியகத்தின் நிகழ்ச்சி நிரலை ஏற்பாடு செய்தல் உகந்தது.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 5.0 கற்பித்தல் முறையும் பாடவேளைகளும்

வரலாறு கற்பிக்கும் ஆசிரியர், தகவல்களை வழங்குவதை விடவும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்களைத் தூண்டுபவராக செயற்படுவாராயின் கற்பித்தலானது மிகவும் பயனுள்ளதாக அமையும். இதன்பொருட்டு இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் கலந்துரையாடல், மூலாதாரங்களை ஆராய்தல், அவதானிப்பு போன்ற செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல் வேண்டும். வரலாற்றைப் பொருளுள்ளதாக கற்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தக் கூடிய வழிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய மரபுரிமை வாய்ந்த, பிரதேச மரபுரிமை வாய்ந்த பொருட்களைப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல்
- மாணவர்களை பிரதேச வரலாற்றை அறிந்து கொள்வதில் ஆர்வமூட்டுவதனூடாக தேசிய வரலாற்றையும் அறிந்து கொள்வதற்கு வழிப்படுத்தல்
- பல்வேறு ஊடகங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல் (வானொலி, தொலைக்காட்சி கல்விச் சேவை)
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட ஊக்குவித்தல்
- மூலாதாரங்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல்
- மாணவரின் திறமைக்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் சுவர்ப்பத்திரிகை, கண்காட்சி, பாடசாலை அரும்பொருளகத்தை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்
- நடைமுறைப்பிரச்சினைகள் தொடர்பாக நடுநிலையுடனும் யதார்த்தபூர்வமாகவும் நோக்கக் கூடிய சிறந்த பிரசையை உருவாக்கும் செயற்பாட்டில் வரலாறு பாடத்தை கற்பிக்கும் உங்களுக்கு பங்களிப்புச்செய்ய முடியும். அது தொடர்பாக உங்களது பொறுப்பு மிகவும் பரந்துபட்டது.

### உத்தேச பாடவேளைகள்

### தரம் 10

| பாட அலகு | பாடவேளைகள் |
|---|---|
| 10.1 | 03 |
| 10.2 | 06 |
| 10.3 | 12 |
| 10.4 | 12 |
| 10.5 | 06 |
| 10.6 | 11 |
| 10.7 | 10 |
| 10.8 | 05 |
| 10.9 | 07 |
| 10.10 | 06 |
| 10.11 | 12 |
| **மொத்தம்** | **90** |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பரீட்சை, கணிப்பீட்டுச் செயற்பாடுகளை கீழ்வருமாறு மேற்கொள்ளுதல் சிறந்தது.

### வகுப்பறைக் கணிப்பீடு

எழுத்துப் பரீட்சை, வாய்மொழி மூலப் பரீட்சை, செயற்றிட்டம் போன்ற செயற்பாடுகளினூடாக மேற்கொள்ளப்பட முடியும். இதற்காக பாடசாலை மட்டக் கணிப்பீட்டுச் செயன்முறையில் வழங்கப்பட்டுள்ள மாதிரிகளினூடாக கணிப்பீட்டு கருவிகளைத் தயாரித்துக் கொள்ளல் உசிதமானது.

### ஆண்டிறுதிக் கணிப்பீடு

வருட இறுதியில் நடைபெறும் பாடசாலை மட்டத்தில் அல்லது வலய மட்டத்திலான அல்லது மாகாண மட்டத்திலான எழுத்துப் பரீட்சைக்கு மாணவர்களை தோற்றச் செய்தல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 10 ஆந் தரம்
# வரலாறு பாடதிட்டம்

**அலகு 10.1**

**தேர்ச்சி** : வரலாறு பாடத்தை கற்பதற்குப் பொருத்தமான மூலாதாரங்களை ஆராய்ந்தறிவார்

## தேர்ச்சி மட்டங்கள்

- வரலாறு பற்றிப் பொருள் விளங்கச் செய்வார்/ வரைவிலக்கணஞ் செய்வார்
- வரலாற்றைக் கற்பதன் பெறுமானத்தை மதிப்பார்
- வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்களை வகைப்படுத்துவார்

**பாட உள்ளடக்கம்** **(பாடவேளைகள் 03)**

**10.1 வரலாற்றுக்கு ஓர் அறிமுகம்**

10.1.1 வரலாறு என்றால் என்ன?
10.1.2 வரலாற்றைக் கற்பதன் அனுகூலங்கள்
10.1.3 வரலாற்று மூலாதாரங்கள்

- இலக்கிய மூலாதாரங்கள்
  - உள்நாட்டு
  - வெளிநாட்டு இலக்கியங்கள்
- தொல்பொருள் ஆதாரங்கள்
  - நாணயங்கள்
  - கல்வெட்டுக்கள்
  - சிதைவுகள்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- வரலாறு தொடர்பான வரைவிலக்கணங்களைச் சேகரித்தல்
- வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்காக வரலாற்று மூலாதாரங்களின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் அறிக்கை தயாரித்தல்

## தர உள்ளீடுகள்

- வரலாறு பற்றிய வரைவிலக்கணங்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.2**

**தேர்ச்சி** : இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சியைக் கற்பார்

## தேர்ச்சி மட்டங்கள்

- இந்திய ஆரியக் குடியிருப்புக்களை கற்பார்
- பதினாறு பெருதேசங்களை தேசப்படத்தில் குறிப்பார்
- மௌரியப் பேரரசின் பரவலுக்குப் பங்களிப்பு நல்கிய அரசர்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்வார்
- குப்தப் பேரரசின் பரவலைக் கற்பார்
- குப்த யுகத்தின் கலாசார பணிகளை மதிப்பிடுவார்

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 06)

**10.2 இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சி**

10.2.1 இந்தியாவின் ஆரியக் குடியேற்றங்கள்
10.2.2 பதினாறு பெருதேசங்கள் (மஹா ஜனபதங்கள்)
10.2.3 மௌரியப் பேரரசு
10.2.4 குப்தப் பேரரசு

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- இந்திய ஆரியக் குடியிருப்புக்களின் பரவலினை தேசப்படத்தில் குறித்தல்
- பதினாறு பெருதேசங்களை தேசப்படத்தில் குறித்தல்
- மௌரியப் பேரரசின் எழுச்சியினைக் காட்டும் தேசப்படமொன்றைத் தயாரித்தல்
- குப்தப் பேரரசின் எழுச்சியினைக் காட்டும் தேசப்படமொன்றைத் தயாரித்தல்
- மௌரிய, குப்த கலைகள் தொடர்பான படங்களைச் சேகரித்தல்

## தர உள்ளீடுகள்

- சாராாணாத் தூண் தலை, சாரணாத் புத்தர் சிலை, சாஞ்சி தூபி, அஜந்தா ஓவியங்கள் போன்ற படங்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.3**

**தேர்ச்சி** : பொலன்னறுவை யுகத்தின் இறுதி வரையிலான இலங்கையின் வரலாற்று வளர்ச்சியினை கற்பார்

### தேர்ச்சி மட்டங்கள்

- இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய யுகம் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்
- ஆரியக் குடியிருப்புக்களின் அமைவிடம் தொடர்பாகக் கற்பார்
- பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரையிலான முக்கிய அரசர்களினது பணிகளை மதிப்பார்
- தென்னிந்திய ஆக்கிரமிப்பினை கற்பார்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 12)

**10.3 வரலாற்றுக்கு முந்திய யுகம் முதல் பொலன்னறுவை யுகத்தின் இறுதிவரையிலான இலங்கை வரலாறு**

10.3.1 வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
- வரலாற்றுக்கு முற்பட்ட இடங்களை இனங்காணல்
- வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் வாழ்க்கைக்கோலம்

10.3.2 ஆரியக் குடியேற்றங்கள்
- விஜயனின் கதைகள்
- குடியேற்றங்களின் பரவல்
- ஆரியர்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார முறைமைகள்

10.3.3 பொலன்னறுவை இராச்சியத்தின் இறுதிவரை அரசியல் வரலாறு
- ஆட்சியை நிலை நிறுத்தல்
- அரசர்கள்
  பண்டுகாபயன், தேவனாம்பியதிசன், எல்லாளன், துட்டகைமுனு, காசியப்பன், இரண்டாம் அக்போ, நான்காம் மஹிந்த, ஐந்தாம் மஹிந்த, மகா பாராக்கிரமபாகு, நிஸ்ஸங்க மல்லன்
- தென்னிந்திய ஆக்கிரமிப்பு

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- வரலாற்றுக்கு முந்திய இடங்களை தேசப்படமொன்றில் குறித்தல்
- பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவத்தின் மூலமாக வரலாற்றுக்கு முந்திய மனிதனின் வாழ்க்கைக் கோலத்தை இனங் காணுதல்
- ஆரியக் குடியிருப்பின் பரவலினை தேசப்படமொன்றில் குறித்தல்

## தர உள்ளீடுகள்

- வரலாற்றுக்கு முந்திய இடங்களை காட்டும் இலங்கைப்படம்
- பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவப்படம்
- ஆரியக் குடியிருப்புக்களின் பரவலினை காட்டும் படம்

**அலகு 10.4**

**தேர்ச்சி** : நீர்வள நாகரீகம் என்றால் என்ன என்பதை விளக்குவார்

**தேர்ச்சி மட்டங்கள்**

- நீர்வள நாகரீகத்தின் நீரியல் தொழினுட்பம் தொடர்பாகக் கற்பார்
- நீர்வள நாகரீகத்தின் ஆட்சி ஒழுங்கமைப்பு முறைகளைப் பரிசீலிப்பார்
- நீர்வள நாகரீகத்தின் பொருளாதார முறைகளை விபரிப்பார்
- நீர்வள நாகரீகத்தின் சமய, கலாசாரம் தொடர்பான தகவல்களைக் கற்பார்
- வெளிநாட்டு உறவுகளை விபரிப்பார்
- நீர்வள நாகரீகத்தின் வீழ்ச்சியை விபரிப்பார்

**பாட உள்ளடக்கம்** **(பாடவேளைகள் 12)**

**10.4 நீர்வள நாகரீகத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்**

10.4.1 நீர்பாசன முறையும் தொழினுட்பமும்
- ஆரம்பமும் வளர்ச்சியும்
- சிறிய குளங்கள் முதல் பாரியக் குளங்கள் வரை
- குளங்களும் கால்வாய்த் தொகுதிகளும்
- நீரியல் தொழினுட்பம் - குளத்தின் பிரதான கூறுகள்
- கால்வாய் தொடர்பான தொழினுட்பம்

10.4.2 நிர்வாக ஒழுங்கமைப்பு
- மத்திய ஆட்சி
- உள்ளூராட்சி

10.4.3 பொருளாதாரக் கோலங்கள்
- விவசாயம்
- கைத்தொழில்
- வர்த்தகம்

10.4.4 சமயமும் கலாசாரமும்
- பௌத்தம்
  - அரசனும் சமயமும்
  - பௌத்த கோட்பாடுகள்
- இந்து சமயம்
- ஏனைய சமயங்கள்
- கலாசாரம், சமுதாய வாழ்க்கை, கலையும் கட்டட நிர்மாணமும், கல்வி, இலக்கியம்

10.4.5 வெளிநாடுகளுடனான தொடர்புகள்
- இராஜதந்திர உறவு
- கலாசார உறவு

10.4.6 நீர்வள நாகரீகத்தின் வீழ்ச்சி

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- இராஜரட்டை நீர்பாசனத் தொகுதியைக் காட்டும் தேசப்படத்தை உருவாக்குதல்
- குளமொன்றின் மாதிரியை நிர்மாணித்தல்
- நீர்வள நாகரீகத்தின் நிர்வாக ஒழுங்கமைப்பு பற்றிய அறிக்கையை தயாரித்தல்
- நீர்வள நாகரீகத்தின் பொருளாதார முறைமை தொடர்பாக கலந்துரையாடல்
- நீர்வள நாகரீகத்தின் சமய, கட்டிடங்களினது படங்களைச் சேகரித்து, அதன் மூலம் சமயமும் கலாசாரமும் பற்றிய கலந்துரையாடலினை ஒழுங்குபடுத்தல்
- நீர்வள நாகரீக வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தெளிவுபடுத்தும் வகையில் அறிஞர்கள் குழுவினது கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தல்
- பொலன்னறுவை இராஜதானியின் இறுதிவரை இலங்கை வரலாற்றில் முக்கியமான அரசர்களினதும் அவர்களது சேவைகள் தொடர்பான அட்டவணை தயாரித்தல்
- பொலன்னறுவைக் காலத்தில் இடம்பெற்ற தென்னிந்திய ஆக்கிரமிப்பும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பாக பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்

## தர உள்ளீடுகள்

- வரலாற்றுக்கு முற்பட்ட இடங்களைக் காட்டும் இலங்கைப்படம்
- பலாங்கொடை மனிதனின் கற்பனை உருவப்படம்
- ஆரியக் குடியிருப்புக்களின் பரவலை சித்தரிக்கும் தேசப்படம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.5**

**தேர்ச்சி** : மத்திய கால இலங்கையின் முக்கியமான வரலாற்று நிகழ்ச்சிகளை கற்பார்

## தேர்ச்சி மட்டங்கள்

- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை இலங்கையின் அரசியல், பொருளாதார, சமய, சமூக வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிப்பார்
- இலங்கையின் 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரை கலை, கட்டட நிர்மாணம், இலக்கியம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்
- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டு வரையிலான இலங்கையின் இராசதானிகளை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 06)

**10.5 13ம் நூற்றாண்டிலிருந்து 15ம் நூற்றாண்டின் இறுதி வரை இலங்கை**

10.5.1 அரசியல் வரலாறு
10.5.2 பொருளாதார மாற்றங்கள்
10.5.3 சமுதாய மாற்றங்கள்
10.5.4 சமய, இலக்கிய, கலை, கட்டடக்கலை

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரையிலான இலங்கையின் இராசதானிகளை தேசப்படமொன்றில் குறித்தல்
- 13ம் நூற்றாணடு முதல் 15ம் நூற்றாண்டு வரை இலங்கையின் அரசியல், பொருளாதார, சமய, சமூக நிலைமைகளை தேடியறிய குழுச் செயற்பாட்டிலீடுபடுத்துதல்
- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கியப் படைப்புக்களின் பட்டியல் தயாரித்தல்
- 13ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை கலை மற்றும் கட்டட நிர்மாணம் ஆகியவற்றின் படங்களை சேகரித்தல்

## தர உள்ளீடுகள்

- மத்திய கால இராசதானிகள் உள்ள தேசப்படம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.6**

**தேர்ச்சி** : மத்திய கால உலகின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் கற்பார்

**தேர்ச்சி மட்டங்கள்**

- மத்திய கால ஆசியாவின் அரசியற் தகவல்களை சேகரித்து விளக்குவார்
- மத்திய கால ஆசியாவின் கலாசார நடவடிக்கைகளைக் கற்பார்
- மத்திய கால ஆசிய நாடுகளுக்கிடையில் இடம் பெற்ற தொடர்புகளை விசாரித்தறிவார்
- மத்திய கால ஆசியாவின் வரலாற்று இடங்களை தேசப்படமொன்றின் ஊடாக விளக்குவார்

**பாட உள்ளடக்கம்** **(பாடவேளைகள் 11)**

**10.6 மத்திய கால ஆசியா**

10.6.1 இஸ்லாமிய சமயத்தின் பரவலும் இந்தியாவில் அதன் தாக்கமும்
- வடமேல் மற்றும் மேற்கு இந்தியா
- டில்லி சுல்தான் சாம்ராஜ்யம்
- மொகலாய பேரரசு
- தக்கணத்தில் பகமன் அரசு
- விஜய நகரப் பேரரசு

10.6.2 ஆசியாவின் பௌத்த, இந்து சமயங்களின் செல்வாக்கு
- மத்திய ஆசியா
- சீனா
- பர்மா (மியன்மார்)
- சீயம் (தாய்லாந்து)
- ஜாவா, சுமத்திரா
- கம்போடியா (கம்பூச்சியா)

10.6.3 இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையிலான தொடர்புகள்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- மத்திய கால இந்தியாவின் இஸ்லாம் மார்க்கம் பரவிய பிரதேசங்களை தேசப்படம் ஒன்றில் குறித்துப் பெயரிடல்
- மத்திய கால ஆசியாவின் பௌத்த, இந்து சமயங்களின் செல்வாக்குத் தொடர்பான தகவல்கள், படங்கள் சேகரித்து களப்புத்தகம் ஒன்றை ஒழுங்குபடுத்தல்
- மத்திய கால யுகத்தின் இலங்கைக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையிலான அரசியல், கலாசாரம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய அட்டவணையொன்றைத் தயாரித்தல்

## தர உள்ளீடுகள்

- மத்திய கால ஆசியப்படம்
- மத்திய கால ஆசியாவின் சமய கட்டடங்களின் படங்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.7**

**தேர்ச்சி** : மத்திய கால உலகின் முக்கியமான வரலாற்றுத் தகவல்களைக் கற்பார்

**தேர்ச்சி மட்டங்கள்**

- ஐரோப்பாவில் இடம்பெற்ற மானிய முறை தொடர்பான தகவல்களை முன்வைப்பார்
- சிலுவை யுத்தத்துடன் வர்த்தகம் வளர்ச்சியடைந்த விதத்தை விளக்குவார்
- மறுமலர்ச்சி யுகத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பிடுவார்
- ஐரோப்பாவில் உருவாக்கிய தேசிய அரசுகளின் பண்புகளைத் தெளிவுபடுத்துவார்
- நாடுகாண் பயணங்களின் முக்கியத்துவமான சந்தர்ப்பங்களை தேசப்படமொன்றினூடாக விளக்குவார்
- ஐரோப்பாவில் ஏற்பட்ட சமய சீர்த்திருத்தங்களை விபரிப்பார்

**பாட உள்ளடக்கம்** **(பாடவேளைகள் 10)**

**10.7 மத்திய கால ஐரோப்பாவில் அரசியல், பொருளாதார, கலாசார வளர்ச்சி**

10.7.1 நில மானிய முறை
10.7.2 சிலுவை யுத்தமும் வர்த்தக விருத்தியும்
10.7.3 மறுமலர்ச்சி
10.7.4 ஐரோப்பிய தேசிய அரசுகள்
10.7.5 நாடுகாண் கண்டுபிடிப்புக்கள்
10.7.6 மதச்சீர்த்திருத்தம்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- நில மானிய பண்புகளைக் கலந்துரையாடுதல்
- ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி தொடர்பாக பின்வரும் தலைப்புக்களின் கீழ் சிறு நூலாக்குதல்
    - விஞ்ஞானக் கண்டுபிடிப்பு
    - கலை, கட்டட நிர்மாணம்
    - கல்வி
- ஐரோப்பாவில் தோன்றிய அரசுகள் தொடர்பாக பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்
- நாடுகாண் பயணங்களின் போக்குவரத்துப் பாதையினைக் காட்டும் படம் ஒன்றை உருவாக்குதல்

## தர உள்ளீடுகள்

- நாடுகாண் கண்டுபிடிப்புகளின் போக்குவரத்துப் பாதைகளைக்காட்டும் உலகப்படம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.8**

**தேர்ச்சி :** ஐரோப்பிய இனத்தவரின் ஆட்சிப் பரவல் ஏற்பட்ட விதத்னை எகற்பார்

## தேர்ச்சி மட்டங்கள்

- ஐரோப்பிய இனத்தவர் குடியேற்றங்களைத் தேடிச் சென்றமைக்கான காரணங்களைத் தேடியறிவார்
- ஐரோப்பிய இனத்தவர் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திய நாடுகளினைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவார்
- கிறிஸ்தவ சமயத்தின் பரவல் இடம்பெற்ற விதத்தைப் பரிசீலிப்பார்

**பாட உள்ளடக்கம்** **(பாடவேளைகள் 05)**

**10.8 ஐரோப்பிய அதிகார விரிவாக்கம்**

10.8.1 ஸ்பானியா, போர்த்துக்கல், ஒல்லாந்தர், இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க்

10.8.2 கிறிஸ்தவ சமயத்தின் பரவல்
- றோமன் கத்தோலிக்க சமயம்
- புரட்டஸ்தாந்து சமயம்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐரோப்பிய அதிகார விரிவாக்கத்தினைக் காட்டும் தேசப்படத்தினை ஆக்குதல்
- ஐரோப்பிய இனத்தவர் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க அரசுகளில் பெற்றுக் கொண்ட பொருளாதாரப் பயன்களை அட்டவணைப்படுத்தல்

## தர உள்ளீடுகள்

- ஐரோப்பிய அதிகார விரிவாக்கத்தினைக் காட்டும் தேசப்படம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.9**

**தேர்ச்சி** : இலங்கைக்கும் மேற்கத்தையோருக்கும் இடையில் நிலவிய தொடர்புகளை விபரிப்பார்

## தேர்ச்சி மட்டங்கள்

- கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்களுடன் போர்த்துக்கேயர் ஏற்படுத்திக்கொண்ட தொடர்புகளை விபரிப்பார்
- மேற்கத்திய இனத்தவர் கண்டி இராச்சியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்பினை தேடியறிவார்

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 07)

**10.9 இலங்கையும் மேற்கு நாடுகளும்**

10.9.1 கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை இராச்சியங்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையிலான தொடர்புகள்
10.9.2 கண்டி இராச்சியத்திற்கும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயருக்கும் இடையிலான தொடர்புகள்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயருடன் இடம் பெற்ற உறவுகள் தொடர்பாக கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தல்
- சீதாவாக்கை முதலாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து விரட்டியடிப்பதற்கு மேற்கொண்ட கொள்கைகள் எனும் தலைப்பில் சுவர்ப்பத்திரிகைக்கு ஆக்கம் எழுதுதல்

## தர உள்ளீடுகள்

- கோட்டை, யாழ்ப்பாணம், சீதாவாக்கை, கண்டி இராச்சியங்கள் குறிக்கப்பட்ட தேசப்படம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.10**

**தேர்ச்சி** : ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை கற்பார்

## தேர்ச்சி மட்டங்கள்

- கைத்தொழில் புரட்சி ஆரம்பமாகிய விதத்தை விளக்குவார்
- கைத்தொழில் புரட்சிக் காலத்தில் ஏற்பட்ட புத்தாக்கங்களைக் கற்பார்
- கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதக தன்மைகளை விபரிப்பார்
- கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்களினை தேசப்படத்தினூடாக விபரிப்பார்

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 06)

**10.10 கைத்தொழில் புரட்சி**

10.10.1 ஆரம்பமும் வளர்ச்சியும்

10.6.2 புதிய கண்டு பிடிப்புக்கள்

10.6.3 விளைவுகள்

- அரசியல்
- பொருளாதாரம்
- சமூகம்

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- கைத்தொழில் புரட்சிக்குரிய புதிய கண்டுபிடிப்புகளும் அவற்றை உருவாக்கிய நபர்களினதும் தொடர்பான பெயர்ப்பட்டியலை உருவாக்குதல்
- கைத்தொழில் புரட்சியுடன் தொடர்பான புதிய கண்டுபிடிப்பு அல்லது படங்கள் சேகரித்தல்
- கைத்தொழில் புரட்சியின் சாதக, பாதக விளைவுகளை வெளிப்படுத்தும் விதத்தில் விவாதம்/ உரையாடல்/ கலந்துரையாடல்
- கைத்தொழில் புரட்சி பரவிய பிரதேசங்களினை தேசப்படத்தில் குறித்துப் பெயரிடல்

## தர உள்ளீடுகள்

- கைத்தொழில் புரட்சியுடன் தொடர்பான புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அட்டவணை/ படங்கள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**அலகு 10.11**

**தேர்ச்சி** : ஐரோப்பாவின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் கற்பார்

## தேர்ச்சி மட்டங்கள்

- பிரான்சியப் புரட்சியினால் வென்றெடுத்த உரிமைகளை விபரிப்பார்
- இத்தாலிய ஐக்கியப்படுத்தும் இயக்கம், ஜேர்மனிய ஐக்கிய இயக்கங்களுக்கூடாக தேசிய வாதம், மானுடவாதம் எழுச்சி பெற்ற விதத்தைத் தெளிவுபடுத்துவார்
- இரஷ்சியப் புரட்சி மூலமாக புதிய பொருளாதார, அரசியல் சிந்தனைகள் தோற்றம் பெற்ற விதத்தை விளக்குவார்

## பாட உள்ளடக்கம் (பாடவேளைகள் 12)

**10.11ஐரோப்பாவின் புதிய அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சி**

10.11.1 மானுட வாதம்
- பிரான்சியப் புரட்சி

10.11.2 தேசிய வாதம், தாராண்மை வாதம்
- இத்தாலிய ஐக்கிய இயக்கம்
- ஜேர்மனிய ஐக்கிய இயக்கம்

10.6.3 சமவுடமை வாதம்
- இரஷ்சியப் புரட்சி

## உத்தேச கற்றல் செயற்பாடுகள்

- பிரான்சியப் புரட்சியினூடாக மானுட வாதம் எழுச்சி பெற்றமை பற்றிய கலந்துரையாடலை ஒழுங்குபடுத்துதல்
- இத்தாலிய ஐக்கிய இயக்கம், ஜேர்மனிய ஐக்கிய இயக்கம் ஊடாக தேசியவாதம், தாராண்மைவாதம் தோன்றிய விதம் தொடர்பாக அறிஞர் குழாத்தின் கலந்துரையா டலினை ஒழுங்குபடுத்தல்
- இரஷ்சியப் புரட்சியுடன் தொடர்பாக சமவுடமைவாதம் தோன்றிய விதம் பற்றி பத்திரிகைக்கு ஆக்கம் ஒன்றை எழுதுதல்

## தர உள்ளீடுகள்

- ஐரோப்பிய தேசப்படம்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## வரலாறு பாடத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| 1. | பேராசிரியை திருமதி இந்திராணி முனசிங்ஹ | - கொழும்பு பல்கலைக்கழகம் |
| 2. | பேராசிரியை திருமதி மாலினி அதகம | - ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம் |
| 3. | பேராசிரியர் எம்.யூ.த சில்வா | - உருகுணை பல்கலைக்கழகம் |
| 4. | பேராசிரியர் யூ.பீ. கருணானந்த | - களனிப் பல்கலைக்கழகம் |
| 5. | பேராசிரியர் ஏ.வீ. சுரவீர | - தேசிய கல்வி ஆணைக்குழு |
| 6. | பேராசிரியர் கே.எம்.பீ. குலசேகர | - களனிப் பல்கலைக்கழகம் |
| 7. | கலாநிதி. எஸ். அனுசியா | - தென்கிழக்குப் பல்கலைக்கழகம் |
| 8. | திரு. ரீ. இராஜேந்திரன் | - இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் |
| 9. | திரு. எச்.ஏ. லக்ஷ்மன் | - கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| 10. | திரு. சீ.எஸ்.ஜயசிங்ஹ | - ஆசிரியர் மத்திய நிலையம், ஹொரண |
| 11. | திருமதி. என்.எஸ்.கே வீரகோன் | - க/உடுவ ம.வி., உடுவ |
| 12. | திருமதி. ஆர்.எம்.டப்ளியு. மெனிக்கே | - மீ/மல்லவகெதர ம.வி., மல்லவகெதர |
| 13. | திருமதி. ஆர்.டப்ளியு.எஸ். தால | - த/மெசனட் வித்தியாலயம், கந்தானை |
| 14. | திரு. ஏ.முஸ்லிமீன் | - பொ/முஸ்லிம் ம.வி., பொலன்னறுவை |
| 15. | அருட் சகோதரி. மேரி டொனேடா | - புனித அந்தோனியார் ஆண்கள் த.வி., கொட்டாஞ்சேனை |
| 16. | திரு விமல் சியம்பலாகொட | - உதவிப் பணிப்பாளர் நாயகம் - தே.க.நி |
| 17. | திருமதி. எச்.டீ.ஏ. லலிதா படுவிடகே | - பணிப்பாளர் சமூக விஞ்ஞானத்துறை - தே.க.நி |
| 18. | திரு. பி.எல்.ஆர். ரோஹனகுமார | - பிரதி செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி |
| 19. | திருமதி. டி.எச். சந்திமா நிஷானி தர்மபால | - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி |
| 20. | திரு. எப்.எம். நவாஸ்தீன் | - செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி |
| 21. | திரு. எஸ். கருணாகரன் | - உதவிச் செயற்றிட்ட அதிகாரி - தே.க.நி |

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.